மலர் 1 இதழ் 1 ஜுலை, 2016 ISSN : 2454-3993

# வெண்ணிலாவின் பெண் கவிதைமொழி

**ந. முருகேசபாண்டியன்**
மதுரை

மனித மனம் போல கவிதையும் எல்லாவிதமான வரையறைகளையும் மீறி, தனக்கான வெளியைச் சுயமாகக் கட்டமைக்கிறது. கலங்கலான வாசிப்பினில் அழகியலாக வெளிப்படும் கவிதையானது, மொழியின் வழியே வாசிப்பினில் அதிர்வையேற்படுத்த முயலுகிறது. தொன்மையான மொழிகளில் இலக்கியம், கவிதையிலிருந்து தொடங்குகிறது. ரசனை, தொனி, அழகியல் சார்ந்த சொற்களின் வழியே சந்தத்தோடு விரியும் காட்சிகள் கவிதை இன்பமாக வடிவெடுக்கின்றன. அதேவேளையில் மாறிவரும் வாழ்பனுவங்களைச் சித்திரிப்பதும் கவிதையில் நடைபெறுகின்றது. இரண்டாயிரமாண்டுப் பாரம்பரியமுடைய நெடிய தமிழ்க் கவிதை மரபானது. காலந்தோறும் புதிய மாற்றங்களைக் கிரகிக்கிறது. சங்ககாலத்தில் தெய்வமுற்று, ஆவேசமான பெண் கட்டுவிச்சியாக மாறி உதிர்த்த சொற்கள், கவிதைக்கு மிகவும்

நெருக்கமானவை. நனவிலிருந்து விலகித் தானாக உதிரும் சொற்கள் மந்திரமாக மாறும் வல்லமையுடையவை. குடும்பம் மூலம் யதார்த்த இருப்பினைத் தீவிரத்துடன் கட்டமைக்கும் பெண், உணர்ச்சிப்பெருக்கில் வெளிப்படுத்தும் சொற்கள் கவிதையானது, பெண்ணுக்கு மிகவும் நெருக்கமானது. தாலாட்டு, ஒப்பாரி, சொலவடை தொடங்கி விரியும் பெண்ணின் அந்தரங்க உலகம் தனித்துவமானது; கவிதையுடன் தொடர்புடையது. பெண்மை என்றால் மென்மை எனப் புனையப்பட்ட ஆண்மைய நோக்கானது, பெண்களின் கவிதையிலும் அதே போக்கினை எதிர்பார்த்தது. பண்பாட்டுரீதியில் காலங்காலமாகக் கட்டமைக்கப்பட்டிருந்த பெண் பற்றிய பிம்பச் சிதைவாக்கம் கவிதையிலும் வெளிப்பட்டது. பெண் தனக்கான கவிதையைத் தனிப்பட்ட மொழியில் வெளியிடுவது 2001–க்குப் பின்னர் தமிழில் வீரியத்துடன் பெருகியது. இத்தகைய போக்கினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெண், கவிஞர்களின் பட்டியலில் அ. வெண்ணிலா குறிப்பிடத்தக்கவர். நீரில் அலையும் முகம் (2001) கவிதைத் தொகுப்பு மூலம் அடியெடுத்து வைத்த வெண்ணிலா, கடந்த பத்தாண்டுகளில் ஐந்து தொகுப்புகள் வெளியிட்டுள்ளார்.

பெண் என்று தன்னை அறிந்த நிலையில், சூழலுடன் ஒத்தும், முரண்பட்டும் வாழ வேண்டிய காலகட்டத்தில், பால் அடையாளம் காரணமாகப் பெண் எதிர்கொள்ளும் அவஸ்தைகள் ஆணுக்கு முற்றிலும் அந்நியமானவை. ஆணின் லோதிக்கம், பால் சமத்துவமின்ம்ம காரணமாக ஒடுக்கப்படும் பெண்ணின் உடல் அடையும் அலைக்கழிப்பு, குழப்பம், மனச்சோர்வு, தனிமை, பதற்றம், நிம்மதியின்மை போன்றன அழுத்தமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. பல்லாண்டுகளாக அடக்கியொடுக்கப்பட்ட குறியீடுகளுக்கு நெருக்கமான நிலையில், நனவிலி மனதின் உச்சத்தை மொழியின் வழியாகக் கவிதையாக்குவதில் பெண்ணுக்கு ஈடு இணை எதுவுமில்லை. இதுவரை சமூகம் பல்லாண்டுகளாக வடிவமைத்துப் புனிதமெனப் போற்றிய விழுமியங்களைக் கேள்வியாக்குவதில், பெண்ணுக்குக் கவிதை வடிவம் மிகவும் நெருக்கமானது. அடக்கியொடுக்கப்பட்ட பெண் தனக்கான மொழியை உருவாக்கிக்கொள்ளக் கவிதையைவிடச் சிறந்த கருவி எதுவுமில்லை.

பொதுவாகக் கவிதையானது தனிமனித இருப்பு சார்ந்தும், அகம் சார்ந்தும் படைக்கப்பட்டாலும், அது மறைமுகமாகவோ அல்லது நேரிடையாகவோ சமூகத்துடன் ஊடாடுகிறது. இந்நிலையில் தனிப்பட்ட பெண் மொழியானது பெண் என்னும் கவிஞருடன் முடங்கி விடுவதில்லை. பல்வேறு பேச்சுகளை உள்ளடக்கிய பேச்சினைக் கவிதையாக்கும் போது, அது வாழ்க்கை குறித்த ஆழமான கேள்விகளை எழுப்புகிறது.

**ஈரப் பிசுபிசுப்போடு**
**உட்கார்ந்து இருப்பீர்களா**
**ரத்தப் பெருக்கோடும்**
**உறங்க வேண்டியிருக்கு**

எனத் தொடங்கும் வெண்ணிலாவின் கவிதை வரிகள் எளிய கேள்வியை ஆணின் முன் வைக்கின்றன: பெண் உடம்பின் அவஸ்தையை விவரிக்கின்றன.

இயற்கையின் அரவணைப்பில் பெண் தனக்கான வெளியை லாவகமாக நிறுவுகின்றாள். தாவரங்கள், சிறிய உயிரினங்கள் எனச் சூழ்ந்தள்ள வாழ்க்கையில், இயற்கை மீதான பெண்ணின் ஈடுபாடு தனித்துவமானது. இயற்கையை நேசிப்பதுடன், இயற்கைக்கும் தனக்குமான நெருங்கிய உறவின் வழியாகத் தன்னை அடையாளப்படுத்துவது பெண் கவிதையில் இயல்பாகப் பதிவாகிறது.

**ஒவ்வொரு பூவிலும்**
**சிறகு குவித்தமர்ந்து**
**தேன் உறிஞ்சிக் கொண்டிருந்த**
**ஒற்றைப் பட்டாம்பூச்சியும்**
**பசுமை பருகிக் கொண்டிருந்த நானும்**
**மேலெழும்பிச் சிலிர்த்துப் போனோம்**
**கொஞ்சமும் கசங்கிப் போகாத**
**செடிகளின் மௌனம் குறித்து**

சங்க மரபின் பின்பலமுடைய தமிழ்க் கவிதையின் ஆதாரம் இயற்கை சார்ந்ததை வெண்ணிலா மன ஈர்ப்புடன் விவரித்துள்ளார். பல்வேறு அறிவியல் விந்தைகளின் ஆதிக்கத்தில் உலகமே இயந்திரமானதாக உருமாறும் வேளையில், இயற்கையோடு இயைந்த வாழ்க்கை சாத்தியமானது என்பதை அறிய உதவுகின்றன இவ்வரிகள்,

**இலைகளும் பூக்களும்**
**நிரம்பியிருந்த**
**என்மரம்**
**உதிர்க்கத் துவங்குகிறது.**
**தன் பசுமையை.**

என் நதி, மல்லிகைச் செடி, நீலவானம் என இயற்கையைத் தன்னுடன் இணைத்துக் கொள்ளும் கவிஞர், வறட்சியான கோடையை வெயில் அள்ளிப் பருக கோடையை வரவேற்கத் தயாராகிறேன் என்கிறார். பருவ மாற்றங்களின வழியே உயிரினங்களின் ஜீவிதம் உறுதிப்படும் நிலையில், வெக்கையடிக்கும் கோடைப் பருவத்தையும் வரவேற்கத் தயாராவது இயற்கைக்குள் ஐக்கியமாகும் மனநிலையைப் புலப்படுத்துகிறது.

**என் உடலை விதைத்திருந்தார்கள்**
**என் மார்புக் காம்புகள் நீருற்ற**
**பூச்செடிகளும் மரங்களும்**
**துளிர்விட்டு வளர்ந்து**
**விருட்சமாயிருந்தன**
**விளையாட**
**சிட்டுக்குருவிகளும் புறாக்களும்**
**போட்டியிட்டன**

அதியற்புதப் புனைவாக நீளும் கவிதையின் மூலம் பெண்ணுடல் பற்றிய விநோதம் கட்டமைக்கப்பட்டுள்ளது. வலிமையின் அடையாளமான பெண்ணுக்குத் தனது உடலே விளைநிலமாவது பற்றிய பிரச்சினை உண்டு. ஆனால் உடலையே விதைப்பதான வெண்ணிலாவின் கற்பனை இயற்கைக்குள் பயணிக்க முயலுகிறது. மார்புக் காம்புகள் நீருற்ற தாவரம் செழித்து வளர்ந்து விருட்சமாவது புனைவின் உச்சம். வெண்ணிலா கவிதையின் தனித்துவமான அம்சம் ‘இயற்கை’யுடனான நேசம். இயற்கைச் சூழலுடன் தன்னைப் பொருத்திக் கொள்ளுதல், தனது வலியை இயற்கையின் மீது ஏற்றிக் காண்பதும் வெண்ணிலாவுக்கு இயல்பாகவே கைவரப்பெற்றுள்ளது. இயற்கைக் குறித்தத் தனது ஈடுபாட்டினை மனத்தடைகள் எதுவுமின்றி வெளிப்படுத்தும் கவிதை மூலம் கவிஞர் ஏகாந்த உலகினுள் பயணிக்கிறார்.

**இரவு முழுவதும்**
**கசிந்து கொண்டிருக்கிற**
**பூவின் மணம்**
**துயரைக் கிளர்த்துகிறது**
**தீராத அதன் வாசமா**
**முழுமையாய்ப் பகிரப்படாத சோகமா**
**பூவொன்றின் இருப்பு**
**குழந்தை ஒன்றின் இருப்பைப் போல்**
**பதற்றமுண்டாக்குகிறது.**

மலர், மலரிலிருந்து வீசும் மணம், இரவு ஆகிய மூன்று அம்சங்களின் ஒருங்கிணைப்பில் துயரம் கசிவதும் பதற்றம் ஏற்படுவதும் விநோதம்தான். பூமி எப்போதும் இவ்வளவு சோகத்துடன் இல்லையென்பது போல பூவினை முன்வைத்துக் கவிஞர் சித்திரிக்கும் மனப்பதிவு பதற்றமானதுதான். இயற்கையின் எழிலான பூவினை முன்வைத்துச் சொல்லப்பட்டுள்ளவை, கவிஞரின் மனவுணர்வினைப் பின்புலமாகக் கொண்டுள்ளன.

ஒப்பீட்டளவில் ஆணைவிடப் பெண் தனது உடலினை நன்கு அறிந்துள்ளாள், ஒவ்வொரு மாதமும் நிகழும் மாதசுழற்சி தொடங்கிக் கருப்பை, பனிக்குடம், மகப்பேறு என விரியும் பெண்ணுடல் தனக்கான இருப்பினை நிறுவுகிறது. உடலில் ஏற்படும் மாற்றங்களின் வழியே மனமும் வேறு ஒன்றாகிச் சமூக நிறுவனங்கள் இதுவரை கட்டமைத்துள்ள விதிகளைப் புறந்தள்ளுவது இயல்பாக நடந்தேறுகிறது. அதிலும் ‘நீதி இலக்கியம்’ என்ற இலக்கியவகையின் மூலம் பெண்ணுக்கெனத் தனிப்பட்ட நிலையில் ஏவி விடப்படும் ஒழுக்க அஸ்திரங்களைப் பெண் எங்ஙனம் எதிர்கொள்கிறாள் என்பது முக்கியமான கேள்வி. மகளிரைச் ‘சிறை காக்கும் காப்பு எவன் செய்யும்?’ என்ற வள்ளுவரின் கவிதைவரி எக்காலத்துக்கும் பொருந்தும். உடல் புனைந்திடும் தனக்கான கொண்டாட்டத்தில் சாத்தானுடன் ஆன சிநேகம் தவிர்க்கவியலாது. உடலைத் துறுத்தல் மூலம் ‘வீடுபேறு’ எனப் புனைவாக ‘மதங்கள்’ முன்வைக்கும் தீர்வினைப் பெண்ணுடல் கேள்விக்குள்ளாக்குகிறது; புறக்கணிக்கிறது.

**மனசு**
**சாத்தான்களின்**
**இருப்பிடமாகி விடுகிறது**
**நாம் பேசிக் கொள்ளாத நேரங்களில்**

மனசுக்கும் சாத்தானுக்குமான நெருக்கமான உறவு என்பது கவிதையை வேறு தளத்திற்கு மாற்றுகின்றது

**தனித்திருக்கும் மனப் பிசாசில்**
**எத்தனை 'நீ'க்கள்**

மனப்பிசாசு என்ற உருவம் மூலம் வெண்ணிலா என்ன சொல்ல விழைகிறார்?

**ரகசிய சிநேகிதன் ஒருவனுடன்**
**வாழ்வதன் ருசி தெரியமா உங்களுக்கு?** என்ற கேள்வியுடன் தொடங்கும் கவிதை.
**தலையணையாகி**
**தவிப்படக்கும்**
**இரவொன்றைப் போல்**
**ரகசிய சிநேகத்தை**
**கைக் கொள்கிறோம்**
**ஒத்துக் கொள்ளும்**
**விகித முரண்பாடுகளில்**
**கை நழுவிக் கிடக்கிறார்கள்**
**ரகசிய சிநேகிதர்கள்**

என விரியும் நிலையில் சிநேகிதம் எப்படி ரகசியமாக முடியும் என்ற கேள்வி தோன்றுகிறது. சிறிய அத்துமீறல் காரணமாக மனம் அடையும் குதூகலம் ஒருபுறம் எனில் குற்றமனம் இன்னொருபுறம் என இருவேறு முரணில் குழம்பித் தவிக்கம் மனம் புனைந்திடும் 'ரகசியம்' என்ற சொல் காற்றில் மிதக்கிறது. இங்கு ஆதித்தாயின் தன்னிச்சையான குரலைக் கண்டறிய முடிகிறது.

**உன் மனமெங்கும்**
**என் ஆக்கிரமிப்பில்**
**இருப்பினும்**
**நெஞ்சுக் குழிக்குள் தீராத் தவிப்பொன்று**
**வெறி கொண்டு கிளர்த்துகிறது என்னை**
**நீ இன்னும் மிச்சமிருப்பதாய்**

எப்பொழுதும் தீராத ப்ரியத்தின் வழியே கட்டமைக்கப்படும் மனதின் உக்கிரமான கொந்தளிப்பில்,பால் அடையாளமற்ற இக்கவிதை வரிகள் முழுமையாகத் தேடுகின்றன. எதிர் பாலித்தை மிச்சமற்று விழுங்கிட முயலும் தீராத தவிப்பின் வழியாக வெண்ணிலா புனைந்திட விழைவது முடிவிலித் தன்மையுடையது.

**குற்றவுணர்வின்**
**கசப்புப் பொங்கும்**
**முத்தங்களில்**

**கரைந்துருகும் நேசப் பெருவெளி**
**முன்வேலிகளில்**
**சிதைந்து கிடக்கின்றன**
**நேசப் பெருவெளி தின்ற முத்தங்கள்**

நேசம் பெருவெளியாக விரிவடையும்போது, மனதின் சிறகுகளுக்கு அளவேது? குற்றவுணர்வு தகித்தாலும், கசப்புப் பொங்கினாலும் பரிமாறப்பட்ட முத்தங்களின் வழியே கரைந்துருகும் நேசத்தின் தீராத பக்கங்களில் வாழ்க்கை பிரகாசிக்கின்றது. உடலுக்குள் இயல்பாக ஏற்படுகின்ற வேதியியல் மாற்றங்களும், அனிச்சையாகச் சுரக்கும் ஹார்மோன் சுரப்பிகளின் விளைவுகளும் உடலையும் மனதையும் வெளியெங்கும் வீசுகின்றன. தொடர்ந்திடும் தவிப்பின் ஆளுமையை அடையாளப்படுத்தும் வெண்ணிலாவின் வரிகள் கங்கு போல கனல்கின்றன.

தாய்மை என்ற சொல்மூலம் புனிதமாக்கப்பட்டுள்ள புனைவினை நவீனப் பெண்ணியம் புறந்தள்ளுகின்றது. பெண்ணுடல் என்ற நிலையில் கருவுற்று இன்னொரு புதிய உயிரினை உலகுக்கு வழங்கும்நிலையில் பெண்ணின் மனம், தன்னை அடையாளங் காண்கிறது. எதிர்பார்ப்புகள் எதுவுமற்ற குழந்தைகளின் உலகம் கள்ளங்கபடமற்றது, அதிலும் தாய்க்கும் மகளுக்குமான உறவு வெவ்வேறு தளங்களில் விரிகின்றது. வெண்ணிலா தனது மகளின் உடலில் புகுந்து, தனது இளம் பிராயத்தை மீட்டெடுத்து எழுதும் வலிகள் வீரியமானவை. ஒரு நிலைமையில் கவிஞர் மகளாகும் விந்தை கவிதையில் நிகழ்கிறது.

**வலி சுகி மகளே**
**வலிக்குதும்மா**
**அரும்பும் முலைக்காம்புப் பற்றி**
**சிணுங்குகிறாள்**
**அமுதக்கலசத்தின்**
**புறப்பாடு**
**வலி சுகி மகளே**
**வலி சுகித்தலே**
**பெண்ணாயிருத்தல்**

வளரிளம் பெண் உடல்ரீதியில் புதிதாக எதிர்கொள்ளும் மாற்றத்தை வலியுடன் தொடர்புபடுத்தி வலி சுகித்தலே பெண்ணாயிருத்தல் என மகளுடன் உரையாடும் வெண்ணிலாவின் கவிதை வரிகள் தாய்–மகள் உறவின் நெருக்கத்தைப் புலப்படுத்துகின்றன. பெண்ணின் தனிப்பட்ட பிரச்சினைகளையும் சமூக மொழிக் கவிதையின் அடித்தளமாகும். பேதங்களால் காலங்காலமாக அடிமைப்பட்டுக் கிடக்கும் பெண்ணுடலை விடுவிக்கும் முயற்சி, பெண் கவிதை மொழியில் தொடர்கிறது. பெண்ணின் அனுபவம் சார்ந்து உருவாகும் பெண் மொழி என ஒதுக்கும் போக்கு ஏற்புடையதல்ல. சமூகத் தளங்களில் இதுவரை பெண் பற்றி ஆண் மொழியினால் உருவாக்கப்பட்டுள்ள பிம்பங்களுக்கு மாற்றாகத் தன்னுடைய உடலையும், பாலியல் விழைவையும், பால் சார்ந்த மனக் குழப்பத்தையும் பெண் எழுத தொடங்கினால், எதிர்ப்பும் கண்டனமும் எழுகின்றன. ஆனால் பெண் படைப்பாளர்கள் தங்கள் கவிதைகளின் வழியே மறுதலிப்பை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர், பால் நிலையில் பெண் எனத் தன்னை உணரும் உடல் அடையும் உணர்வுகள், அனுபவங்கள் ஒரு போதும் ஆண்களால் ஊகித்தறியப்படாதவை. வெண்ணிலாவின் கவிதையுலகும் பெண் என்ற நிலையில் தனக்கான தனித்தவத்தைக் கட்டமைத்துள்ளது. அது ஆணின் மனதில் அதிர்வை ஏற்படுத்துகின்றது.

**மார்புக் காம்புகளும்**
**வயிற்றுக் சுருக்கங்களும்**
**சொல்லும்**
**என் பிள்ளை பிறப்பின்**
**அடையாளத்தை**

என்ற வெண்ணிலாவின் தொடக்கக்காலக் கவிதை, பெண்ணுடலில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைப் பதிவாக்கியுள்ளது. திருமணம் ஆன பெண் என்ற புற அடையாளங்களுக்கு மாற்றாக உடல் அடையாளத்தை முன்னிறுத்துவது 'தேவதைக் கனவு' சிதைந்ததின் எரிச்சலா? அல்லது சமூக நெருக்கடிக்களுக்கு எதிர் வினையா? பெண் மனதின் தவிப்பையும் வெட்கத்தையும் கசப்பையும் வெறுப்பையும் தனது கவிதையின் வழியே கண்டறிய முயலும் கவிஞர், பரவசங்கள் வடிந்துவிட்ட காதலை என்ன செய்வது? என்ற தீவிரமாக யோசிக்கிறார், வெண்ணிலாவின் அண்மைக் கவிதைகளில் கருத்தியல்ரீதியல் பாடுபொருளானது மாற்றமடைந்துள்ளது. ஒருவிதமான அமைதியானது கவிதையாக்கத்தில் கைவரப்பெற்றுள்ளது.

**துளிர்க்கின்றன**
**இலைகள்**
**மரங்களுக்கென்ன வண்ணம்**
**உதிர்கின்றன**
**பூக்கள்**
**மரங்களுக்கென்ன பசி**
**முளைத்தெழுகின்றன**
**விதைகள்**
**மரங்கெளுக்கென்ன நம்பிக்கை**
**துளிர்க்கும்**
**உதிக்கும்**
**முளைத்தெழும்**
**மரங்களைச் சுற்றும் பருவங்கள்**
**பெண்**
**பருவம்.**

தமிழில் பெண் மொழி தனக்கான இடத்தைக் கண்டறிந்துள்ளது என்பதை வெண்ணிலாவின் கவிதை வரிகள் நுட்பமாக வெளிப்படுத்துகின்றன. இயற்கையின் பரவசத்துடன் பெண்ணாகிய தன்னையும் ஒப்பிட்டுக் காணும் முயற்சி, கவிதையை வேறு தளத்திற்கு நகர்த்துகின்றது. பெண் என்ற பெருமிதத் தொனி,பெண் மொழியில் தனித்தவமானது. வெண்ணிலாவின் பல கவிதைகளுக்கெனத் தலைப்பு எதுவுமில்லை, எனவே வாசகர் சுயம் சார்ந்த நிலையில் தனக்கானதாகக் கவிதையைக் கட்டமைத்துக் கொள்ள முடியும். கடந்த பதினைந்து ஆண்டுகளாகக் கவிதை எழுதும் வெண்ணிலாவிற்கெனத் தனிப்பட்ட மொழி கைவரப் பெற்றுள்ளது. பூடகப்படுத்துதல் அல்லது மர்மப்படுத்துதல் மூலம் புனையப்படும் கவிதை வரிகள் சில இடங்களில் நீர்த்துப் போயுள்ளன. சில குட்டிக் கவிதைகள் வெறுமனே மனப்பதிவாகவே பதிவாகியுள்ளன. எனினும் தனது அனுபவம் சார்ந்து, தன்னை மையமிட்டு விரியும் கவிதைகளின் மூலம் வெண்ணிலாவின் கவிதையுலகினுக்குள் பயணிக்க இயலும். பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்ட கவிதைகளைத் தொகுத்து வாசிக்கும்போது, ஏற்ற இறக்கங்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது. கவிதை மொழியானது பாசாங்கு அற்று, பால் அடையாளத்துடன் தனித்துள்ளது.